1982 பிப்ரவரி 12]

தென்னாற்காடு மாவட்டத்திற்கு பெயர் மாற்றம் செய்யும் திட்டம்.

*வினா எண். 166—திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்திற்கு வள்ளலார் மாவட்டம் என்று பெயர் மாற்றம் செய்யும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இல்லை.

திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு தலைவரவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையை அமல் படுத்தி வருகிறார்கள். அவர்களின் பெயரிலே மாவட்டம் கூட அமைத்திருக்கிறார்கள். அதேபோன்று பகுத்தறிவுக் கொள்கையை பரப்பிவந்த வள்ளலாரின் பெயரை தென்னாற்காடு மாவட்டத்திற்கு வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, நான் முதலிலேயே பதில் சொல்லிவிட்டேன். மீண்டும் கேட்கிறார்கள். இல்லை.

அரசு அலுவலகங்களில் நடைபெறும் பணிகளில் தமிழை முழுமையாகச் செயற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 167—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தலைமைச் செயலகம், மாவட்ட, வட்ட அலுவலகங்களில் அலுவல்கள் முழுமையும் தமிழ் ஆட்சி மொழியிலேயே அமைய காலவரையறை நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம். மூன்றாண்டுக்குள் ஆட்சிமொழி மூவாண்டு முனைப்புத் திட்டம் (1981–83) மூலம் தமிழை முழுமையாக செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 9.20)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அலுவலகங்களிலே கோப்புகளை முழுவதுமாக தமிழிலே எழுதுவதை ஊக்குவிக்கும் முறையில் கொடுக்கப்படும் பரிசுகள் ஒரு மாவட்டத்திற்கு 2 என்ற வீதத்தில்தான் கொடுக்கப்படுகிறது. இந்தத் திட்டம் முறையாக செயல்படவும், இன்னும் நல்ல முறையில் தமிழில் கோப்புகளை உருவாக்கவும் ஒவ்வொரு துறைக்கும் பரிசு என்ற வகையில் அல்லது வட்ட அளவிலாவது பரிசு கொடுக்கப்படும் என்ற வகையில் அரசு இதனை மாற்றி அமைக்க முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்?